P.R.NO:04 **பத்திரிக்கைச் செய்தி** நாள்:01.08.2017

## சிறுபான்மையின மக்களுக்கு கடன் வழங்கும் முகாம்

தமிழ்நாட்டில் வாழும் மதவழி சிறுபான்மையினர்களான கிறித்துவர், இஸ்லாமியர், பௌத்தர், சமணர், பார்சி மற்றும் சீக்கிய மதத்தைச் சார்ந்த பொருளாதாரத்தில் பின்தங்கிய நிலையில் உள்ள மக்கள் புதிதாக தொழில் தொடங்கவும் ஏற்கனவே செய்து கொண்டிருக்கும் தொழிலை விரிவுபடுத்தியும் தங்கள் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்திக்கொள்ள ஏதுவாக தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தின் மூலம் குறைந்த வட்டியில் தனிநபர் கடன், சிறுவணிகக்கடன், கல்விக்கடன், கறவை மாட்டுக்கடன் மற்றும் ஆட்டோ கடன் ஆகியவை வழங்கப்பட்டு வருகின்றன.

இக்கடன் திட்டங்கள் தொடர்பான விவரங்களையும் சந்தேகங்களையும் தெளிவுபடுத்திக் கொள்ளவும் கடன் திட்டங்களுக்கு விண்ணப்பிக்கவும் ஏதுவாக வருகின்ற 17.8.17 காலை 11.00 மணியளவில் திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் உள்ள கீழ் தளத்தில் அமைந்துள்ள கூட்ட அரங்கில் கடன் வழங்கும் முகாம் (லோன் மேளா) நடைபெற உள்ளதால் இம்முகாமில் மேற்படி கடன் தேவைப்படும் சிறுபான்மையின மக்கள் கடன் தொகை பெற ஆதார் அட்டை நகல், சாதிச் சான்றிதழ் / பள்ளி மாற்றுச் சான்றிதழ் நகல், வருமான சான்றிதழ் நகல், இருப்பிட சான்றிதழ் நகல், உண்மைச் சான்றிதழ் அசல் நகல் (Bonafide Certificate- கல்விக் கடன்), கல்விக் கட்டணங்கள் செலுத்திய ரசீது, மதிப்பெண் சான்றிதழ் நகல், வங்கி கோரும் இதர ஆவணங்களுடன் நேரில் கலந்து கொண்டு பயனடையுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

மாவட்ட ஆட்சித் தலைவர்,
திருநெல்வேலி.

வெளியீடு
செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம்